- மின் வயர்கள் குழந்தைகளுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும்
- படிகட்டுகளின் மேல்புறமும் கீழ்புறமும் பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். சுவற்றின் மீது ஆழப்பதித்திருக்க வேண்டும் – வெறுமனே அழுத்தத்தினால் மாட்டப்பட்டிருக்கக்கூடாது.
- புத்தகக் கதவுகளை எப்போதுமே உபயோகப் படுத்தக் கூடாது
- தளர்ந்த தரைவிரிப்பு அகற்றப்படவேண்டும், உடைந்த அல்ல சமதலமற்ப படிகள் சீர் செய்யப்படவேண்டும்.
- இடங்களைச் சூடாக்கும் ஹீட்டர் அல்லது சூடான ஈரப்பதம் உண்டாக்கும் கருவிகளை குழந்தைகளின் அருகில் பயன்படுத்தக் கூடாது.
- குழந்தை நடை வண்டிகளைப் பயன்படுத்தக் கூடாது
- சன்னல் பாதுகாப்பான்கள் பொருத்தப்பட வேண்டும்.
- எல்லா கயிறுகளும் எட்டாத அளவில் இருக்க வேண்டும் சன்னல் திரை, திரைச் சீலை, தொலைபேசி வயர், கணினி வயர்.
- புத்தக அலமாரிகளும், கனமான மரச்சாமான்களும் சுவற்றுடன் பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- பாதைகளும், அறைகளுக்கான பாதைகளும், ஏணிப்படிகளும் எவ்வித பொருட்களுமின்றி வெளிச்சமூட்டப்பட்டிருக்க வேண்டும்.
- விஷச்செடிகள் கைக்கு எட்டாதவாறு அல்லது வீட்டில் வைக்காமல் இருக்க வேண்டும்.
- சில்லறை காசுகள் எட்டாதவாறு இருக்க வேண்டும்.
- வளர்ப்புப் பிராணிகளுடன் உள்ள குழந்தைகள் எப்போதும் கண்காணிப்பில் இருக்க வேண்டும்.
- வளர்ப்புப் பிராணியின் உணவு, நீர் பாத்திரங்கள் குழந்தைகளுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும்.
- குளிர்காயும் கனப்பு இடங்கள், மரத்தால் எரியும் அடுப்புகள், வெப்பம் வழங்கும் ஹீட்டர்களின் முன்னே தடுப்பு அல்லது பாதுகாப்பு கருவிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- பிற வீடுகளுக்குச் செல்லும்போது குழந்தைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.
- வீட்டுப் பாதுகாப்பு விதிமுறைகள் பற்றி குழந்தைகளுடனும், பிற குடும்ப உறுப்பினர்களுடனும் கலந்து பேச வேண்டும்.

## வசிப்பதற்கும், விளையாடுவதற்கும் பாதுகாப்பான இடமாக உங்கள் வீட்டை அமையுங்கள்.

மேற்கொண்டு தகவலுக்கு அழையுங்கள்
யார்க் பகுதி ஆரோக்கிய சேவைகள்,
ஆரோக்கிய இணைப்பு
1-800-361-5653

**மேற்கோண்டு தகவல்கள்:**

பாதுகாப்பான மழலையர் கனடா 1-888-723-3847

விஷம் கட்டுப்பாடு 1-800-268-9017

**மூலம்:**

பாதுகாப்பான மழலையர் கனடா (2006)
ஆரோக்கிய கனடா (உங்கள் குழந்தை பாதுகாப்பாக இருக்கிறதா 2006).

KEEPING YORKIDS SAFE

York Region    Ontario

# உங்கள் இல்லத்தை பாதுகாப்பாக வைத்திருக்க

## ஒரு சரிப்பார்ப்புப் பட்டியல்



KEEPING YORKIDS SAFE

York Region    Ontario

# இல்லத்தில் பாதுகாப்புக்கு சரிப்பார்ப்புப் பட்டியல்

சுறுசுறுப்பாய் குழந்தைகளைக் கண்காணிப்பதே காயங்களைத் தவிர்க்க மிகப் பயனுள்ள வழி.

குழந்தை ஒரு புதிய வளர்திறனை கற்றுக் கொள்ளும் பொழுதே பெரும்பாலும் காயம் ஏற்படுகிறது. எப்பொழுதும் முன் கூட்டியே திட்டமிடுங்கள். குழந்தையின் வளர்ச்சிக் கட்டங்களைப் பற்றுத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

உங்கள் குழந்தைகளின் சூழல் பாதுகாப்பானதாக இருக்க இந்த சரிப்பார்ப்புப் பட்டியலை உபயோகியுங்கள்.

### சமையலறை

- ☐ எல்லா கூரிய பொருட்களையும் எட்டாத இடத்தில் வைத்து பூட்டி விடுங்கள்
- ☐ சூடான உணவுகளையும் பானங்களையும் எட்டாத இடத்தில் வையுங்கள்.
- ☐ சட்டியின் கைப்பிடி உட்புறமாக இருக்க வைத்து, பின் புற பர்னரை உபயோகிங்கள்.
- ☐ மின் உபகரணங்கள் எட்டாத இடத்திலும், பிளக்கில் இருந்து உருவப்பட்டு, தண்ணீர் இல்லா பகுதியிலும் வைக்கப்பட வேண்டும்.
- ☐ உணவு பரிமாறுமுன் அதன் உஷ்ணத்தை சோதித்துக் கொள்ள வேண்டும்
- ☐ மைக்ரோவேவ் செய்யப்பட்ட உணவுகளும் பானங்களும் உஷ்ணப்படுத்திய பின் நன்றாக கலக்கப்பட வேண்டும்.
- ☐ மூச்சடைக்கும் உணவுகளைத் தவிர்க்கவும். உணவுப் பொருளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்
- ☐ குப்பை மற்றும் பிளாஸ்டிக் பைகளை எட்டாத இடத்தில் வைக்க வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும்
- ☐ செயலாற்றும் தீயணைப்பான் கைவசம் இருக்க வேண்டும் – அனுகக்கூடியதாக இருக்க வேண்டும்
- ☐ உயரமான நாற்காலிகளில் குழந்தைகளை வைத்து விட்டு கவனிக்காமல் இருக்கக்கூடாது பாதுகாப்பு நாடாக்களை உபயோகிக்க வேண்டும்

### குளியலறை

- ☐ குளியலறையில் குழந்தைகள் எப்போதுமே கண்காணிக்கப்பட வேண்டும்
- ☐ குளியல தொட்டியில் வழுக்காத கால் மிதியடி பயன்படுத்த வேண்டும்.
- ☐ குழந்தையை குளிப்பாட்டு முன் நீரின் வெப்பத்தை மணிக்கட்டு அல்லது முழங்கையால் சோதித்துக் கொள்ள வேண்டும்
- ☐ மருந்துகள், வாய் கொப்பளிப்பான்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் எட்டாத இடத்திலும் பூட்டப்பட்டும் இருக்க வேண்டும்
- ☐ குழந்தையின் குளியல் இருக்கையை உபயோகிக்காதீர்.

### படுக்கை அறை மற்றும் விளையாட்டு அறை

- ☐ தொட்டில் நடைமுறை பாதுகாப்புத் தரத்துடனும், செப்டம்பர் 1986க்குப் பின் செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
- ☐ சிசுக்களை மல்லாந்து படுக்க வைக்க வேண்டும்.
- ☐ சன்னலகள், திரைச் சீலைகள் அல்லது சன்னல் திரை கயிறுகள் பக்கத்தில் தொட்டிலோ, படுக்கையோ வைக்கப்படக் கூடாது.
- ☐ டயபர் மாற்றும் மேஜை, மஞ்சம், படுக்கை போன்ற உயர்ந்த தளங்களில் சிசுக்களை கவனிக்காமல் விட்டு வரவேக் கூடாது
- ☐ படுக்கை அறை கதவுகளுக்குப் பூட்டு இருக்கக் கூடாது.
- ☐ 6 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை அடுக்குப் படுக்கையின் உயரப் படுக்கையில் தூங்க வைக்கக் கூடாது.
- ☐ பொம்மைகளை வைக்கும் பெட்டியின் மூடி எடை குறைவாயும், பாதுகாப்பாக மூடும் எந்திர நுட்பத்துடன் அல்லது மூடியே இல்லாமல இருக்க வேண்டும்
- ☐ விளையாட்டுச் சாமான்களும் உபகரணங்களும் குழந்தைகளின் வயதுக்கேற்பவும், பரிந்துரைகளின் படியும் உள்ளதாக இருக்க வேண்டும். சிறிய பொம்மைத் துண்டுகள் எட்டாத அளவில் இருக்க வேண்டும்.
- ☐ மேஜை நாற்காலி போன்றவைகளின் கூரிய முனைகளின் மேலே மெத்தென்று அட்டை வைக்க வேண்டும். அல்லது அறையில் இருந்து நீக்கப்பட வேண்டும்.
- ☐ பேட்டரிக் கட்டைகள் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். (பித்தான் வகை பேட்டரிகளில் விஷத்தன்மை உள்ளன).

### அடித்தளமும் கார் ஷெட்டும்

- ☐ கார் ஷெட்டில் குழந்தைகளை கவனிக்காது தனியே விடக்கூடாது
- ☐ அடித்தளம் எப்போதும் பூட்டியே இருக்க வேண்டும்
- ☐ தீப்பிடிக்கும் தன்மையுள்ள திரவங்கள் சுத்தம் செய்ய உதவும் கரைப்பான்கள் உட்பட வீட்டிற்கு வெளியே தான சேமிக்கப்பட வேண்டும் – அவை சூளை, நீரை சூடாக்கும் கருவி மற்றும் பிற நெருப்பு உமிழும் சாதனங்களிடம் இருந்து தாண்டியிருக்க வேண்டும்.
- ☐ அபாயகரமாண சாதனங்கள் கைக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும்.

### பொது இடங்கள்

- ☐ அவசரகால எண்கள் தொலைபேசி பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்
- ☐ ஒவ்வொரு தளத்திலும் புகை உணர் கருவி, இயங்கும் நிலையில் இருக்க வேண்டும் – வழக்கமாக சோதித்து, சுத்தமாக்கப்பட்டு இலையுதிர், காலத்திலும், வசந்தத்திலும் பேட்டரிகள் மாற்றப்பட்டு இருக்க வேண்டும்.
- ☐ கார்பன்மோனாக்சைடு உணர் கருவி இயங்கும் நிலையில் வீட்டில இருக்க வேண்டும்
- ☐ தீப்பிடித்தால் தப்பிக்க உதவும் வழிகள் குடும்பத்தாருடன் திட்டமிட்டு, கலந்தாலோசித்து அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ☐ தேவையானால வெளியேறும் இடங்களில பாதுகாப்புச் சாதனங்கள் பொறுத்தப்படவேண்டும்.